DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | முத்துராஜ் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | மருதன் | சமயம் | - | |
| கிராமம் | - | சல்டானாரோடு | வயது | - | 58/2025 |
| சாதி | - | | | | |

**27-01-2025**

**( 1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து லாரி பட்டரையில் வேலை செய்து கொண்டு வருகிறேன். ஆஜர் 1-ம் எதிரி அய்யப்பன் என்பவரை தெரியும். ஆஜர் 2-ம் எதிரியை தெரியாது. கடந்த 2022 ம் ஆண்டு 30-ம் தேதி மாதம் நினைவில் இல்லை. நான் வேலையில் இருந்தபோது பகல் 01-30 மணியளவில் 1-ம் எதிரி அய்யப்பன் எ ன்பவர் எனக்கு போன் செய்து எனது மகன் மணிகண்டன் வால்பாறையில் கட்டிடவேலை செய்துகொண்டிருந்தபோது தவறி கட்டிடத்தில் மேலிருந்து கீழே விழுந்துவிட்டதாக தெரிவித்தார். வால்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை கொடுத்தும் முடியாததால் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறினார். மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறினார். நான் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று என் மகனை பார்த்தேன் அவர் தீவிர கண்காணிப்பு பிரிவில் இருந்தார். என் மகனுக்கு மருத்துவர் கழுத்தில் அடிபட்டு இருப்பதாக தெரிவித்தார். அவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டிருப்பதாகவும் உயிர் பிழைப்பது கடினம் என்றும் மேல் சிகிச்சை அளிப்பதாக கூறினார். சம்பவம் நடந்த அன்று வால்பாறை போலீசார் கோவை அரசு மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்தார்கள். அப்போது நான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் 3-ம் தேதி எனது மகன் சிகிச்சை பலனின்றி கோவை அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார். சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | வீட்டுக்குடித்தனம் |
| பெயர் | - | அமுதா | வட்டம் | - | பொள்ளாச்சி |
| க/பெ | - | முத்துராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | சல்டானாரோடு | வயது | - | 47/2025 |
| சாதி | - | | | | |

**27-01-2025**

## ( 1, 2 எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வீட்டுக்குடிதனம் செய்து வருகிறேன். அ.சா.1 முத்துராஜ் எனது கணவராவார். ஆஜர் 1-ம் எதிரி அய்யப்பனை தெரியும். ஆஜர் 2-ம் எதிரியை தெரியாது. கடந்த 30-11-2022-ம் தேதி புதன்கிழமை பகல் 1.30 மணியளவில் எனது மகன் மணிகண்டனுக்கு வால்பாறையில் சென்டிரிங் வேலை செய்துகொண்டிருந்தபோது உயரத்தில் இருந்து விழுந்து கழுத்திலும், முதுகிலும் எலும்பு முறிவு ஏற்பட்டதாக அய்யப்பன் என்பவர் எனது அக்கா மகன் சக்திக்கு போன் செய்தான். சக்தி என்னிடம் தகவல் தெரிவித்தார். என் மகனை பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து செல்வதாக கூறினார். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு என் மகனை அழைத்துசென்றனர். நான் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று என் மகனை பார்த்தபோது அவர் கோமா நிலையில் இருந்தார். என் மகனுக்கு தலையிலும், கழுத்து மற்றும் முதுகு பகுதியில் காயங்கள் ஏற்பட்டிருந்தன. கோவை அரசு மருத்துவமனையில் என் மகனுக்கு ஸ்கேன் எடுத்து பார்த்தபோது அவரது கழுத்து எலும்பு மற்றும் முதுகு எலும்பு உடைந்திருப்பதாக மருத்துவர் தெரிவித்தார். மூன்று நாட்கள் என் மகனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி என் மகன் மருத்துவமனையிலேயே இறந்துவிட்டார். சம்பவம் குறித்து என் கணவர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.